Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 166

திங்கட்கிழமை
11 மே 2026

சித்திரை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50


## மழை தொடரும்

கொழும்பு, மே 11
நாட்டைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் எதிர்வரும் நாள்களில் மழையுடனான காலநிலை அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
தற்போது நாட்டைச் சூழவுள்ள »11

# முள்ளிவாய்க்கால் நினைவை சந்ததிகளுக்குக் கடத்துவோம்

### தமிழ் சிவில் சமூக அமையம் அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 11
**தன் அடையாளத்தையும் உரிமைகளையும் காக்க நினைக்கும் எந்த ஒரு தேசமும் தோற்றுப்போவதில்லை. எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும்வரை, முள்ளிவாய்க்கால் நினைவுகளை எமது தேசிய ஆன்மாவில் உரமிட்டு வளர்ப்போம், நினைவுகளே எமது பேராயுதம் என்று தமிழ் சிவில் சமூக அமையம் அறைகூவல் விடுத்துள்ளது.** »11

## யாழ்தேவி கடுகதி ரயில் இன்றுமுதல் சேவையில்

கொழும்பு, மே 11
கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைக்குப் பயணிக்கும் 'யாழ் தேவி' கடுகதி ரயில் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ரயில்வே »12

## கிளினிக்குகள் அனைத்தும் வழமை போன்று நடக்கும்

### யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அனைத்து நோயாளர் கிளினிக்குகளும் இன்று வழமை போன்று இயங்கும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். »12

## மே 18 இனவழிப்பு நாளாக சட்டசபையில் தீர்மானம்!

### தமிழகத்தின் புதிய முதலமைச்சரிடம் தமிழ்த் தேசியப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11
ஈழத் தமிழர்கள் ஆண்டுதோறும் மே 18 அன்று இனவழிப்பு நாளாக நினைவுகூரும் நிலையில், தமிழக சட்டசபையின் தற்போதைய கூட்டத்தொடரில் அதை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழகத்தின் புதிய முதலமைச்சர் »11




## தமிழகத்தின் முதலமைச்சராக நேற்றுப் பதவியேற்றார் விஜய்

சென்னை, மே 11
தமிழகத்தின் ஒன்பதாவது முதலமைச்சராக தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் சி. ஜோசப் விஜய் நேற்றுப் பதவியேற்றார். அவருடன் 9 அமைச்சர்களும் பதவியேற்றனர்.
அவருக்கான பதவிப் பிரமாணத்தை தமிழக ஆளுநர் ரோஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் »11

## விஜய்க்கு அநுர வாழ்த்து



கொழும்பு, மே 11
தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையும் தமிழ்நாடும் வரலாறு, கலாசாரம், வணிகம் மற்றும் தலைமுறை தலை »11

*180 அலகுகளுக்கு மேல் 18 சதவீத*

## மின் கட்டண அதிகரிப்பு இன்றுமுதல் நடைமுறை

கொழும்பு, மே 11
நடப்பு ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான மின்சாரக் கட்டணத்தை, 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் பிரிவினருக்கு 18 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு »11

## ஆக்கிரமித்த வீதியை விடுவிக்க தையிட்டி விகாரை பின்னடிப்பு!

### பிரதேச சபையின் விடுவிக்கும் நடவடிக்கைக்கு எதிரான மனு இன்று மீள விசாரணை

யாழ்ப்பாணம், மே 11
சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பவானி வீதியை விடுவிப்பதற்கு பிரதேச சபை எடுத்துவரும் நடவடிக்கைக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட »11



“திரையில மட்டுமில்லாம தரையிலையும் சனத்துக்கு நல்லது செய்யிறாரோ எண்டு பாப்பம்”

## மின்சாரக் கட்டண உயர்வு அரசு அறவிடும் கப்பமே!

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு
விரிவு பக்கம்:-06

## கிளிநொச்சியில் குழு மோதல் நால்வர் மருத்துவமனைகளில்

கிளிநொச்சி, மே 11
கிளிநொச்சி, அம்பாள்குளத்தில் இரு குழுக்களுக்கு இடையே நடந்த மோதலில் காயமடைந்த நால்வர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். »11

## இளைஞன் கடத்தப்பட்டு தாக்குதல் முச்சக்கரவண்டிச் சாரதிகள் கைது

வவுனியா, மே 11
வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். »12

## சுகாதாரக்கட்டமைப்பை வலுவாக்க உள்ளே நுழைகின்றனர் எம்.பிக்கள்!

கொழும்பு, மே 11
அனைத்து மாவட்டங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை 'மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக' நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தி, மக்களுக்கு வினைத்திறனான »12



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4427 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 18 45 59 64 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1494 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 10 58 60 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0453 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 5 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2533 |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 11 28 38 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6185 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 5 2 0 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2215 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 08 23 34 54 |
| விசேட எழுத்து | R |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0301 |
| வெற்றி இலக்கினம் | விருட்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 12 33 |

# மாகாணசபைத் தேர்தல் தாமதமெனில் செயற்குழுவில் இருந்து வெளிநடப்பு!

## எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை!

கொழும்பு,மே 11

**இலங்கையில் நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் செயற்குழுவுக்கு வழங்கப்பட்ட 3 மாத காலக்கெடுவுக்குள் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்காமல், காலத்தை இழுத்தடிக்க முயன்றால் விசேட நாடாளுமன்றச் செயற்குழுவில் இருந்து வெளிநடப்புச் செய் வோம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தலாம் என்று ஆராய்ந்து விதப்புரை மற்றும் யோசனைகளை முன்வைப் பதற்கு, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் 11 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன 2026.02.20ஆம் திகதியன்று விசேட நாடாளுமன்ற செயற்குழுவை நியமித்தார்.

முழுமையான அதிகாரமளிக்கப்பட்ட இந்தச் செயற்குழு 3 மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதன் முதலாவது கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதியன்று கூடியது.

இதற்கமைய மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து குழுவின் உறுப்பினரான சாணக்கியன் இராசமாணிக்கம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் நான்கு அறிக்கைகளைக் கோரியுள்ளார். இதற்கமைய, செயற்குழு 03 மாதகாலத்துக்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்காமல் குழுவின் காலத்தை நீடித்தால் குழுவில் இருந்து வெளிநடப்புச் செய்வதற்கு குழுவின் உறுப்பினர்களான இலங்கைத்தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கம், இலங்கைத்தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச்செயலாளர் நிசாம் காரியப்பர் ஆகியோர் அவதானம் செலுத்தியுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதற்கு தற்காலிக ஏற்பாடு ஒன்றைக் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்கு எதிர்வரும் 21ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழுவைச் செயற்குழுவுக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0893 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 3 8 9 3 7 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3159 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 12 36 48 61 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 03 05 27 38 |
| வெற்றி வாரம் | 5320 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0989 |
| வெற்றி இலக்கம் | 18 25 46 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| விருட்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 18 20 22 30 |
| சீட்டிழுப்பு வாரம் | 4871 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கம் | 18 33 39 58 |
| வெற்றி வாரம் | 2335 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 10.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 28 52 57 66 |
| வெற்றி வாரம் | 2985 |

# திறைசேரி நிதி மோசடி அமெ.வங்கிக் கணக்குக்கு ஒரு பகுதி நிதி மாற்றம்!

கொழும்பு,மே 11

திறைசேரியின் கணினிக் கட்டமைப்புக்குள் ஊடுருவி, அவுஸ்திரேலியாவுக்குச் செலுத்த வேண்டிய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை மோசடி செய்த விவகாரத்தில், தற்போது ஒரு பகுதி நிதி அமெரிக்காவின் டெலவெயார் மாநிலத்தில் உள்ள வங்கிக்கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச புலனாய்வு அமைப்புகளின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த விசாரணையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தத் தொகையான 2.5 மில்லியன் டொலரும் ஒரே கணக்குக்குச் செல்லவில்லை. அவை பல நாடுகளிலுள்ள பல்வேறு கணக்குகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியின் பின்னணியைக் கண்டறிய இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு, அமெரிக்காவின் எப்.பி.ஐ , அவுஸ்திரேலிய அதிகாரிகள் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

கடன் செலுத்தும் முறைமை முழுமையாக டிஜிற்றல் மயமாக்கப்பட்டுள்ளது. பௌதீக ஆவணங்களோ அல்லது மேலதிகக் கையொப்பங்களோ இன்றி, குறிப்பிட்ட அதிகாரிகளின் டிஜிற்றல் அனுமதியின் கீழ் மாத்திரமே இவ்வளவு பெரிய தொகைகள் கையாளப்படுகின்றது. இதுவே மோசடிக்காரர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# சுரேஷ் சலே போன்றோரும் பலிக்கடா ஆக்கப்படலாம்!

## பதறுகிறார் விமல்



கொழும்பு,மே 11

நாட்டின் தற்போதைய மர்ம மரணங்கள் மற்றும் அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அந்த வகையில் தற்போதைய சூழலில் சுரேஷ் சலே போன்ற புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஒருவர் வெளியில் வந்தால் அவரின் பாதுகாப்பு எவ்வாறு அமையும்? அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து முற்றிலும் தவறியுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டமும் நீதியும் சரியாக, நேர்மையான முறையில் நிலைநாட்டப்பட்டால் எவரும் இத்தகைய விபரீத முடிவுகளை எடுக்க நினைப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

பொதுவாக ஒரு அரசாங்கம் என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும். மாறாக, அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மக்கள் உயிர்மாய்த்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது. இந்த விடயத்தில் அரசாங்கம் தனது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவில்லை. இந்த அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மட்டுமே செயற்பட்டு வருகிறது - என்றார். (ச-இ)

# எயார்பஸ் ஊழல் விவகாரம்; மஹிந்தவுக்கு அழைப்பு!

கொழும்பு,மே 11

2013ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு 14 எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி முறைகேடு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எயார்பஸ் நிறுவனத்திடம் இருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றதாக முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி மீது குற்றஞ்சுமத்தப்பட்டது.

விசாரணைகளின் போது, தமக்குக் கிடைத்த தொகையில்: 60 மில்லியன் ரூபாவை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் 20 மில்லியன் ரூபாவை அப்போதைய அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவுக்கும் வழங்கியதாக கபில சந்திரசேன வாக்குமூலம் அளித்ததாக ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வாக்குமூலமானது கபில சந்திரசேனவினால் சுயமாக வழங்கப்பட்டது அல்ல என அவரது சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன வாதிட்டுள்ளார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தனது கட்சிக்காரரை (கபில சந்திரசேன) மிரட்டியே இவ்வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டதாக அவர் நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாளை இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் ஆஜராகி இந்த விடயம் குறித்து தனது விளக்கத்தை அளிக்கவுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச துறை 'டிஜிற்றல் பரிமாற்றம்' முன்னோடி வலையமைப்பு நிறுவல்

**கொழும்பு,மே 11**

**இலங்கை அரசாங்கத்தின் டிஜிற்றல் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு அங்கமாக, அரச சேவையை நவீனமயப்படுத்துவதற்காக 'PIC Net' (Public Impact Champions Network) எனும் புதிய முன்னோடி வலையமைப்பை நிறுவுவதற்கு ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இதுதொடர்பான விசேட சுற்றறிக்கையை அனைத்து அரச நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார். அரசாங்கத்தின் டிஜிற்றல் பொருளாதார இலக்குகளை எட்டும் நோக்கில், ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் டிஜிற்றல் மாற்றத்தை முன்னெடுப்பதற்கான விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு அரச நிறுவன அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு தேர்ந்தெடுக்கப்படும். நாடு முழுவதும் உள்ள அரச நிறுவனங்களிலிருந்து சுமார் 400 பேர் கொண்ட ஒரு தேசிய டிஜிற்றல் மாற்ற முன்னோடிக் குழு உருவாக்கப்படும்.

இந்த முன்னோடிகள் அந்தந்த நிறுவனங்களுக்குள் டிஜிற்றல் மாற்றத்திற்கான முக்கியமான உந்துசக்தியாகச் செயற்படுவார்கள். நிறுவனங்களுக்குள் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், பொதுமக்களுக்கான சேவைகளை இலகுவாக்கி, சிறந்த அனுபவத்தை வழங்குதல், பழைய நடைமுறைகளை மாற்றி, வேலைகளை விரைவுபடுத்துவதற்கான செயல்முறைகளை உருவாக்குதல் என்பன அந்தக் குழுக்களின் பொறுப்பாகும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி செயலகம், டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் GovTech Sri Lanka நிறுவனம் ஆகியன இணைந்து செயற்படவுள்ளன. (ச-இ)

## கணினிக் குற்றங்கள் சட்டம் வலுப்படுத்த நடவடிக்கை!

கொழும்பு,மே 11

இலங்கையின் சைபர் பாதுகாப்புக்கான கணினிக் குற்றங்கள் சட்டத்தை மேலும் வலுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் கணினிக் குற்றங்களைக் கையாள்வதற்கு தற்போது மூன்று முக்கியமான சட்டங்கள் ஒருங்கிணைந்து பயன்படுத்தப்படுகின்றன.

2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்ட அத்துமீறி நுழைதல், அனுமதியற்ற பிரவேசம் மற்றும் தரவுத் திருட்டு ஆகியவற்றை வரையறுக்கிறது. தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச்சட்டம் (2022) மக்களின் தனிப்பட்ட விபரங்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் இணையவழித் தளங்களில் நிகழும் முறைகேடுகளைக் கண்காணிக்கிறது. அதற்கமைய எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள அரசாங்கம் ஐந்தாண்டு காலத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. சைபர் தாக்குதல்கள் நடந்தால், அதிலிருந்து விரைவாக மீண்டுவரும் கட்டமைப்பை உருவாக்குதல், நம்பிக்கை மற்றும் கொள்ளளவு: டிஜிற்றல் பரிவர்த்தனைகளில் மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதுடன், அதிகாரிகளின் தொழில்நுட்பத் திறனை வளர்த்தல் என்பன இதன் நோக்கமாகும்என்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## ஹஷீஷ் போதையுடன் இளைஞரொருவர் கைது

ஹஷீஷ் ரக போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இளைஞர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் எனவும், இவர் விற்பனை உதவியாளராகப் பணியாற்றி வருபவர் எனவும் தெரியவந்துள்ளது. தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்துள்ளார். அவர் கொண்டுவந்த பயணப்பொதியை சோதனையிட்டபோது, சொக்லேட் எனப் பொதி செய்யப்பட்ட 15 பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ 778 கிராம் ஹஷீஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பெறுமதிய 4 கோடியே 77 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## மெனிங் சந்தையில் தீ அனர்த்தம்!

கொழும்பு,மே 11

பேலியகொடை மெனிங் பொதுச்சந்தையில் நேற்று மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சுமார் 20 வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீயணைப்பு வீரர்களின் கடும் போராட்டத்தின் பின் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## உள்ளூர் உருளைக்கிழங்குக்கு உத்தரவாத விலை நிர்ணயம்!

கொழும்பு,மே 11

உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், உருளைக்கிழங்குக்கு உத்தரவாத விலையை வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 220 ரூபா என்ற உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யப்படும்.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊடாக இந்தக் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் உள்ளூர் உருளைக்கிழங்குகள் லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக மக்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## எங்களுக்கு ஏன் வெசாக்?

**கெட்டவனைக்கூட நம்பலாம் ஆனால் 'நான் தான் நல்லவன்' என்டுறவையைக் கட்டாயம் நம்பவே கூடாது. 'நாங்கள் முந்தின அரசாங்கம் மாதிரி இல்லை, எல்லாத்தையும் இனம், மதம் கடந்து தான் பாப்பம், எல்லா மதத்துக்கும் சம இடம் குடுப்பம்' என்டெல்லாம் வாய்கிழியக் கத்தின திசைகாட்டிக்காரர், முந்தின மதவாத அரசாங்கங்களைவிடவும் பௌத்த மதத்தை எங்களிட்ட திணிக்கிறதுக்கு கடுமையா 'ட்றை' பண்ணுகினம். அதில லேட்டஸ்ட் நடவடிக்கைதான் எல்லாப் பள்ளிக் கூடங்களிலையும் வெசாக் வாரம் கொண்டாட வேணும் எண்ட சுற்றறிக்கை.**

**வழக்கமா சிங்களப் பள்ளிக்கூடங்களிலதான் வெசாக் கொண்டாட்டங்கள் நடக்கிறது. சைவ, இஸ்லாமியப் பிள்ளையள் மட்டும் படிக்கிற தமிழ்ப் பள்ளிக்கூடங்களில வெசாக் எண்டால் புத்தகத்தில படிக்கிறது மட்டும் தான் பிள்ளையளுக்குத் தெரியும். இதுநாள் வரை எந்தவொரு தமிழ்ப் பள்ளிக்கூடத்திலையும் வெசாக் பண்டிகையைக் கொண்டாடினதா வரலாறில்லை. அவ்வளவு ஏன், யாழ்ப்பாணக் கம்பஸில கூட வெசாக் கொண்டாட வெளிக்கிட்டு முதலில பெரும் பிரச்சினையானது. இப்ப நிறையச் சிங்களப் பிள்ளையள் யாழ்ப்பாணக் கம்பஸில படிக்கிறதால அந்தப் பிரச்சினை அமுங்க, வெசாக் கூடுகள் கட்டி கொண்டாட்டம் நடக்கிறது. வெசாக் எண்டால் ஏதோ தேசிய விழா இல்லைத்தானே. அது ஒரு மதத்தின்ர பண்டிகை. அதை மற்ற மதப்பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடங்களிலையும் கொண்டாடவேணும் எண்டு ஓர்டர் போடுறது மற்ற மதங்களை அடக்கி ஒடுக்கிற வேலைதானே?**

**மே மாதம் 26ஆம் திகதியில இருந்து ஜூன் மாதம் 2ஆம் திகதி வரை வெசாக் வாரமா பள்ளிக்கூடங்கள், கம்பஸுகள், கல்வியியற்கல்லூரிகள், ஆசிரிய கலாசாலையள் எண்ட எல்லாக் கல்விக்கூடங்களிலையும் கொண்டாடவேணும் எண்டும், அந்த ஏழு நாளும் என்னென்ன தலைப்பில நிகழ்ச்சியளை நடத்தவேணும் எண்டும் கல்வி, உயர்கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒண்டை விட்டிருக்குது. எங்கட சில ரோசமுள்ள, தற்துணிவுள்ள அதிகாரிமார் உந்தச் சுற்றுநிருபத்தை ஒரு பொருட்டாவே மதிக்கேலை. சும்மா சாட்டுக்கு அதை வட்ஸ்அப் குரூப்புகளில போட்டுட்டு பேசாமல் இருந்திட்டினம். ஆனால் அரசாங்கத்துக்கு வால்பிடிக்கிற இன்னும் சில அதிகாரிமார், இந்தச் சுற்றுநிருபத்தோட 'கட்டாயம் இதைப் பள்ளிக்கூடங்களில கொண்டாட நடவடிக்கை எடுக்கோணும்' எண்டு ஓர்டர் போட்ட தங்கட கடிதத்தையும் இணைச்சு அனுப்பி வைச்சிருக்கினமாம். திசைகாட்டி அரசாங்கம் இந்தச் சுற்றறிக்கை பௌத்த மத மாணவர்கள் படிக்கிற கல்விக்கூடங்களுக்கு மட்டும் தான் பொருந்தும் எண்டு மாத்தியனுப்பினால் ஒரு சோலியும் இல்லை. இனியாவது அதைச் செய்வினமோ?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னறிவித்தலின்றி சேவை நிறுத்தம்: தனியார் பேருந்துக்கு ரூ. 4,000 தண்டம்

மன்னார்,மே 11

மன்னார் முள்ளிக்குளம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து முன்னறிவித்தல் இன்றி சேவையில் ஈடுபடாமை மற்றும் பயணிகளுடன் நடத்துநர் முரண்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக, பேருந்து உரிமையாளருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த தனியார் பேருந்து முன் அறிவிப்பின்றி, சேவையை நிறுத்தியமையால், அந்த வழித்தடத்தைப் பயன்படுத்தும் மக்கள் வீதியில் காத்திருந்து பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அத்துடன் குறித்த பேருந்தின் நடத்துநர் முறையற்ற விதத்தில் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி பயணிகளுடனும் முரண்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பயணிகளால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் விதிமுறைகளை மீறி, பயணிகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சேவையைத் துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய குற்றங்களுக்காக குறித்த தனியார் பேருந்துக்கு 4 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. அத்துடன், இனிவரும் காலங்களில் பயணிகள் சேவையின்போது இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால், குறித்த பேருந்தின் சேவை அனுமதிப்பத்திரம் முற்றாக இரத்துச் செய்யப்படும் எனவும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-56-பி-66)

# இடர்நிலைமைகளை எதிர்கொள்ள உள்ளூராட்சி சபைகள் தயாராகுக!

## ஆளுநர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,மே 11

தற்போது மாற்றமடைந்துவரும் காலநிலைமைகளுக்கு ஏற்ப, இடர் நிலைமைகளை எதிர்கொள்ளக்கூடிய முன்னாயத்த நடவடிக்கைகளில், உள்ளூராட்சிசபைகள் தங்களைத் தயார்ப்படுத்தி வைத்திருப்பது அவசியம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். உள்ளூராட்சி மட்டத்தில் காலநிலை ஆளுகையை வலுப்படுத்துதல் தொடர்பான வதிவிடச் செயலமர்வு, யாழிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் இன்று நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். திடீரென ஏற்படும் மழை, வெள்ளம் மற்றும் நீண்டகால வறட்சி என்பன எமது வழமையான பருவகால எதிர்வுகூறல்களுக்கு அப்பாற்பட்டதாக மாறிவிட்டன.

இதனால் உணவுப்பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பாக டித்வா பேரிடரால் வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் அழிவுகள் ஏற்பட்டன. இவ்வாறான இயற்கைச் சீற்றங்களை நாம் இனிவரும் காலங்களில் அடிக்கடி எதிர்கொள்ள நேரிடும்.

எனவே, கடந்தகாலப் பேரிடர்களில் இருந்து நாம் கற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு, வருங்காலச் சவால்களை எதிர்கொள்வதற்கான முன்கூட்டிய தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். உள்ளூராட்சிசபைகள் இவ்வாறான சவால்களைத் தற்காலிகமாக அன்றி, நிரந்தரமாக கட்டமைப்பு ரீதியான தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். -என்றார். (க-113-பி)

# தாய், மகளைக் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

மன்னார்,மே 11

கணவருடன் சென்ற மகள் மற்றும் 10 மாதம் நிரம்பிய பேரப்பிள்ளை ஆகிய இருவரையும் காணவில்லை என்று பெண்ணின் தாய் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது மகளின் கணவர் தனது தாய்க்கு சுகவீனம் எனக் கூறி கடந்த 2ஆம் திகதி அவரது சொந்த இடமான மட்டக்களப்புக்குச் செல்வதாகக் கூறி மன்னாரில் இருந்து தனது மகளையும் பேரப்பிள்ளையையும் அழைத்துச் சென்றார். இந்த நிலையில் மகளும் பேரப்பிள்ளையும் காணாமற்போயுள்ளனர்.

மருமகன் மட்டக்களப்பிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும் மகளும் பேரப்பிள்ளையும் அங்கு செல்லாத நிலையில் காணாமற்போயுள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-56)

# சந்நிதியான் ஆச்சிரம வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,மே 11

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வருடாந்த வைகாசிப் பெருவிழாவும், மதிப்பளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், 2025ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருது பெற்றவரும், அமெரிக்காவில் விருது பெற்றவருமான பிரபல நாதஸ்வர வித்துவான் ஈழநல்லூர் பி.எஸ்.பாலமுருகன் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து, விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, சந்நிதியான் ஆச்சிரமத்தில் விருது வழங்கல் நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து வவுனியா அறநெறிப்பாடசாலைகளின் சிறப்புக்கலை நிகழ்வுகளும் நடைபெறும். (க-66-சி)

# இலங்கைக் கடல் கண்காணிப்புக்கு அவுஸ்திரேலியா 12 ட்ரோன்கள்

கொழும்பு,மே 11

அவுஸ்திரேலிய அரசாங்கம் 12 நவீன கண்காணிப்பு ட்ரோன்களை இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படைக்கு வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படையின் 'ஆபரேஷன் சாவரின் பார்டர்ஸ்' தளபதி ரியர் அட்மிரல் பிரட் சோன்டர் இதனை வழங்கிவைத்தார்.

இலங்கையின் கடல் எல்லைப் பாதுகாப்பை நவீனப்படுத்துவதற்கும், ஆட்கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அவை பயன்படுத்தப்படவுள்ளன. (ச-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன்- மனைவிக்கிடையே வீண் வாக்குவாதம் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத்துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பண உதவி செய்வார். அலுவலகத்தில் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** இன்று புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வீட்டில் தொலைந்த பொருள் திரும்பக் கிடைக்கும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர்ச்செலவுகளால் கடன் வாங்க நேரிடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஹரினின் வெற்றுக்கூச்சல்..!

முன்னாள் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜூன் மாதம் தீவிர அரசியலுக்குள் வருவார் என்றும், அதன் பின்னர் நாட்டின் அரசியற்களத்தில் அதிரடித்திருப்பங்கள் ஏற்படும் எனவும் கூறியிருக்கின்றார் முன்னாள் அமைச்சரான ஹரின் பெர்னாண்டோ. இலங்கையைச் சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்கு ரணில் விக்கிரமசிங்க -சஜித் பிரேமதாஸ இருவராலுமே முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தற்போதைய எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் வீணாய்ப்போன நிலையில்தான், மீண்டும் ஒருதடவை ரணில் என்னும் அஸ்திரத்தை ஏவியிருக்கின்றார் ஹரின் பெர்னாண்டோ.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தில் சில குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. தரமற்ற நிலக்கரி இறக்குமதி, திறைசேரி மீதான இணையத் தாக்குதல்கள், எரிபொருள் விலையேற்றம் என குறிப்பிட்டுக் கூறக்கூடிய பின்னடைவு நிலைமைகளை அரசாங்கம் எதிர்கொண்டு வருகின்றது என்பதில் மறு கருத்துக்கு இடமில்லை. ஆனால், இதற்கெல்லாம் மாற்றுத்தீர்வு, ராஜபக்சக்களோ, ரணில் விக்கிரமசிங்கவோ அல்லர். இதை இலங்கையர்கள் ஒவ்வொரும் அறிவார்கள். இன்னும் வெளிப்படையாகக் கூறவேண்டுமெனில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில், அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுடன் ஒப்பிடுகையில் தற்போதைய அரசாங்கத்தில் இடம்பெற்ற தவறுகள் ஒரு விடயமே அல்ல.

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் திவால்நிலையை அடைந்த இலங்கை, முன்னாள் ஜனாதிபதி ரணிலின் காலத்தில் மீண்டெழுந்தது என்னமோ உண்மைதான். அதற்குக் காரணம் நாட்டின் பொருளாதாரக் கொள்கையோ, உள்ளூர் உற்பத்திப் பெருக்கமோ அல்லது நாணயச் சுழற்சியோ அல்ல. மாறாக, வரிகளும் கடன்களும்தான் இலங்கையைப் படுகுழியில் இருந்து பத்திரமாக மீட்டுவந்தன. ஆபத்பாந்தவனாக உதவிக்கு வந்த இந்தியாவும், சர்வதேச நாணய நிதியமும் இல்லையேல் இலங்கை இறந்து புதைந்திருக்கும். இதை ரணிலே பலமுறை ஏற்றுள்ளார். எனவே, ரணிலை பொருளாதார மீட்பர் போன்றும், மீட்பின் சின்னமாகவும் நம்பும் நிலையில் மக்கள் இல்லை என்பதே உண்மை.

ரணில் வங்குரோத்து அடைந்து நீண்டகாலம் ஆகிவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்திதான் ரணில் வங்குரோத்து அடைந்தார் என்பதற்கான முதன்மைச் சின்னம். ரணிலை விடவும் 'பலவீனமான', வங்குரோத்தடைந்த தரப்பினரின் ஆட்சியே அவர் பின்கதவால் கதிரைக்கு வருவதற்குக் காரணமாகின. அதற்காகத் தற்போதைய அரசுக்குச் சவால்விடும் நிலையில் அவர் இல்லை. அத்தகைய ஆட்சியை அவர் எப்போதும் நடத்தியதில்லை. வாக்குறுதிகளைத் தவிர...!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

**பொருள்:** எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.



# சப்புகஸ்கந்த நிலையம் நவீனமயப்படுத்தத் திட்டம்

**கொழும்பு,மே 11**

**நாட்டில் அதிகரித்து வரும் எரிபொருள் தேவையைக் கருத்திற்கொண்டு, சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் தற்போதைய நிலையை மதிப்பிடவும், அதன் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது.**

இதற்கான கேள்விப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 2026 ஜூன் 15ஆம் திகதியுடன் காலஎல்லைநிறைவடையவுள்ளது.

தற்போது நாளொன்றுக்கு 50,000 பீப்பாய்களைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட இந்த நிலையத்தை, அதிகரித்து வரும் எரிபொருள் தேவை மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் தரங்களுக்கு அமைவாக 100,000 பீப்பாய்களாக அதிகரிப்பதே இந்த விரிவாக்கத் திட்டத்தின் முக்கியமான இலக்காகும்.

பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட சீனக்குடா எண்ணெய் தாங்கித் தளத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 24 தாங்கிகளில் 4 தாங்கிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அடிப்பகுதி மற்றும் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்யும் பணிகள் 180 நாள்களுக்குள் முடிக்கப்படும்.

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை வரை 12.78 பில்லியன் ரூபா செலவில் புதிய எரிபொருள் விநியோகக்குழாய் பாதை அமைக்கப்படவுள்ளது.

முத்துராஜவெல மற்றும் கொலன்னாவை பகுதிகளில் புதிய சேமிப்புத் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வீதி விபத்தில் ஒருவர் பலி!

கண்டி ,மே 11

கண்டி மஹியங்கனை பிரதான வீதியின் உடுதும்பர பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டியிலிருந்து மஹியங்கனை நோக்கிப் பயணித்த பாரவூர்தி ஒன்றும், அதற்கு எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்துக்குள்ளானதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ச-இ)




# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு,மே 11



பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மண்சரிவு தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)

# வாகன விபத்தில் 10 பேர் காயம்!

கொழும்பு,மே 11

பெலியத்த தெற்கு அதிவேக வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை பகுதியிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் குழுவினர் பயணித்த கார் ஒன்று, முன்னால் சென்ற லொறியின் பின்பகுதியில் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காரில் பயணித்த மின்சாரசபை ஊழியர்களே இதன்போது பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை- சித்திரை 29
12.05.2026
சுபநேரம் : 10.24 – 11.54
ராகுகாலம் : 02.54 – 04.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சாரக் கட்டண உயர்வு அரசு அறவிடும் கப்பமே!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு,மே 11**

**மின்கட்டண அதிகரிப்பு என்பது முறையான பொருளாதாரத் திட்டம் அல்ல, மாறாக ஊழல் நஷ்டத்தை ஈடுகட்ட மக்கள் மீது சுமத்தப்பட்ட ஒரு சுமை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்தமையால் மின்சாரசபைக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்டவே இந்த 18% அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தவறைச் செய்த ஊழல்வாதிகளிடமிருந்தே பணத்தை அறவிட வேண்டும்.

இந்தத் திடீர் விலை உயர்வை, அரசாங்கம் பொதுமக்களிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பறிக்கும் ஒரு 'கப்பம்' என்றே கருதவேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு 52% பங்களிப்பை வழங்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் இந்த விலையேற்றத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

மின்சாரக் கட்டணம் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பதன் காரணமாக, நாட்டில் உள்ள நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அண்டை நாடுகளுக்குத் வெளியேறும் அபாயம் உள்ளது.

180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் சிறு வியாபாரிகள் இதன் நேரடிப் பாதிப்பை எதிர்கொள்வர். அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை அரசாங்கம் உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் - என்றார். (ச-இ)



# வலைப்பந்தாட்டப் போட்டி கெனடி கழகம் முதலிடம்

கிளிநொச்சி,மே 11

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், 36 ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை இத்தாவில். கெனடி இளைஞர் கழகம் தனதாக்கியுள்ளது. இந்தப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (ச-இ)

### பருத்தித்துறையில்

# 'லஞ்ச் சீற்' பயன்படுத்திய உணவகத்துக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், மே 11

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் தடையைமீறி 'லஞ்ச் சீற்' பயன்படுத்திய உணவு கையாளும் நிலையத்துக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி உணவு நிலையம் இயங்குவதாகவும், அங்கு தடைசெய்யப்பட்ட லஞ்ச் சீற்கள் பயன் படுத்தப்படுவதாகவும் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப. தினேஸ் தலைமையிலான குழுவினர் சோதனை முன்னெடுத்தனர். அரசாங்கத்தின் தடையை மீறி உணவு பொதியிடலுக்கு லஞ்ச் சீற் பயன்படுத்தியமை, நகரசபையின் அனுமதி இன்றி இயங்கியமை, உணவுத் தயாரிப்புக்குப் பயன்படும் நீரின் தரத்தை உறுதிப்படுத்தாமை மற்றும் ஊழியர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இல்லாமை ஆகிய குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

இதுதொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர் தனது குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து. நீதவான் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறக் கூடாது என்றும் கடும் எச்சரிக்கையும் விடுத்தார். (ச-100)

# வடக்கு சுதேச வைத்தியத் திணைக்களம் அடுத்தாண்டில் மாங்குளத்தில்

முல்லைத்தீவு,மே.11

வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் அலுவலகம், மாகாணத்தின் மையப்புள்ளியான மாங்குளத்தில் 2027 ஆம் ஆண்டில் அமைக்கப்படும் என்று வட மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் சர்வானந்தன் உறுதியளித்துள்ளார். மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

மாங்குளத்தில் வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் அமையப்பெறவுள்ள காணியின் நில அளவை வரைபடம் மற்றும் காணி உறுதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றுள்ளோம்.

இந்த ஆண்டில் கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு போதாமலுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். முதற்கட்டமாக இவ்வாண்டில் மாங்குளத்திலுள்ள 2ஏக்கர் காணிக்கு சுற்றுவேலி அமைப்பதற்கும், நுழைவாயில் அமைப்பதற்கும், பெயர்ப்பலகை அமைப்பதற்குமான செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-246-பி)



# காணிப்பிரச்சினைகளுக்கு சட்டரீதியான விழிப்புணர்வு

மன்னார்,மே 11

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது அதி முக்கியத்துவம் பெறும் காணிப் பிரச்சினைகளை, சட்ட ரீதியாக அணுகுதல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு, மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிறுவனத்தின் தலைவர் யே.யாட்சன் பிகிறாடோ தலைமையில் நடைபெற்ற செயலமர்வில், சிவில் சமூக அமைப்புகள், சமூக அடிப்படையிலான அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், காணி பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள், காணி உரிமை பெற விண்ணப்பித்த வர்கள், பலவந்தமாக காணிகளை இழந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர். இதில் காணி உரிமை தொடர்பான புதிய சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. இதில் வளவாளராக, கிழக்கு மாகாண முன்னாள் உதவிக் காணி ஆணையாளர் கதிர்காமத்தம்பி குருநாதன் கலந்துகொண்டார். (க-56-பி)

# சங்தேகநபர் விடுவிப்பென்று பரவும் போலித் தகவல்கள்!

## பொலிஸார் விளக்கம்

அம்பாந்தோட்டை, மே 11

அம்பாந்தோட்டை பகுதியில் பறவைகள் பூங்கா ஒன்றின் உரிமையாளர், சட்டவிரோதமான முறையில் அதிவேக மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகளைப் பொலிஸார் மறுத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பொலிஸாரால் வெளியிடப்பட்ட அறிக்கையில், சந்தேகநபர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகள் பொய்யானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை, நகரவெவ பகுதியைச் சேர்ந்த பறவைகள் பூங்கா உரிமையாளர் மற்றும் ஏனைய இரு சந்தேகநபர்களுக்கு எதிராக, அதிவேக மோட்டார் சைக்கிள்களை சட்ட விரோதமாக இறக்குமதி செய்தமை மற்றும் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பான சட்டநடவடிக்கைகள் தொடர்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மத்திய குற்றப் புலனாய்வுப்பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு ஊழலை மறைக்கும் நாடகமா?



## பாவனையாளர் சங்கம் கேள்வி

கொழும்பு,மே 11

நாட்டின் மின்சாரக் கட்டணம் மீண்டும் 18 வீத அதிகரிக்கப்பானது நிலக்கரி கொள்வனவில் இடம் பெற்ற ஊழல்களை மறைக்கவும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைத் திருப் திப்படுத்தவுமே மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்று க்கு, மின்சாரப் பாவனையாளர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. மின்சாரக் கட்டணம் 18 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் நுகர்வோர் மற்றும் சிறு/நடுத்தர கைத்தொழில் முயற்சி யாளர்கள் பெரும் சுமையை எதிர் கொள்வார்கள்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப் பட்டதால் நுரைச்சோலை மின் உற் பத்தி நிலையம் முறையாக இயங்க வில்லை.

இந்தத் தவற்றால் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறையை ஈடுகட்ட, அதிக விலைக்குத் தனியார் அனல் மின் நிலையங்களிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படுகிறது.

ஐ.எம்.எப். இன் அடுத்த தவணைக் கடனைப் பெறுவதற்காகவே அரசாங் கம் மக்களைப் பாதிக்கும் இந்தத் தீர் மானத்தை எடுத்துள்ளது.

டீசல் பீப்பாய் ஒன்றினை உலகச் சந்தை விலையை விட மிக அதிக மாக 286 டொலர்களுக்கு வாங்கி யமை போன்ற நிர்வாகத் தவறுகளின் நஷ்டத்தை மக்கள் மீது சுமத்துவது அநீதியானது.

மின்சாரக் கட்டண உயர்வால் உற்பத் திச் செலவு அதிகரித்து, உள்நாட்டுச் சிறு தொழில்கள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவு உயர்வால் சந்தை யில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கக்கூடும். கட் டணத்தைக் குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது அதனைப் பல மடங்கு அதிகரித்துள் ளது என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(ச-இ)


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 11

திருநெல்வேலி தெற்குஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை காலை 9.30 மணிக்கு, ஆலய மண்டபத்தில், பரிபா லன சபைத்தலைவர் ந.ஸ்ரீஸ் கந்த ராசா தலைமையில் நடை பெறும்.

(க)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி அதிபர்
திருமதி
சுனீத்ரா சூரியராஜா
அவர்களின் தந்தையார்
அமரர் விஸ்வலிங்கம்
யோகரத்தினம்
அவர்களின் மறைவுக்கு
அஞ்சலிகளைத் செலுத்தி
துயர் பகிர்கின்றோம்.

தோற்றம் 13.06.1944 மறைவு 09.05.2026

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
ஆசிரியர் நலன்புரிக் கழகம்

## பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் உயர்வு

கொழும்பு, மே 11

பெண்களின் புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்தி முன்னெ டுக்கப்படும் சைபர் குற்றங்களைக் கண்டறியவும், அவற்றைத் தடுக்க வும் குற்றப்புலனாய்வுத் திணைக்க ளம் மற்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு ஆகியன சர்வதேச தொழில்நுட்ப உதவியை நாடியுள்ளன. இதுதொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் ஆனந்த விஜேபால தெரிவித் துள்ளதாவது-

கடந்த மூன்று ஆண்டுகளில் பெண் களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. 2023ஆம் ஆண்டு பதிவாகிய 4,103 வழக்குகளில் 3,388 வழக்குகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. 2024ஆம் ஆண்டு 3,159 வழக்குகள் பதிவாகின. அதில் 2,177 இன்னும் தீர்க்கப்படவில்லை. 2025 ஆம் ஆண்டு 4,742 வழக்குகள் பதிவா கின. அதில் 4,170 இன்னும் தீர்க் கப்படவில்லை.

சமூக வலைத்தளங்களில் பெண்க ளுக்கெதிரான துஷ்பிரயோகங்களைத் தடுக்க அர சாங்கம் புதிய பொறிமுறைகளைக் கையாண்டு வருகின்றது. Facebook மற்றும் Instagram நிறுவனங்களுடன் இணைந்து, பெண்களை இலக்குவைக்கும் பாலியல் துஷ்பி ரயோகப் பதிவுகளைக் கண்டறிந்து நீக்க செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படு கிறது-என்றார்.

(ச-இ)

## தரம் 6 பாடசாலை அனுமதிக்கு இணையவழி விண்ணப்பம்!

கொழும்பு, மே 11

2026ஆம் கல்வி ஆண் டிற்காகத் தரம் 6 மாணவர் களைப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான இரண்டாம் கட்ட மேன்மு றையீடுகளை ஏற்கும் பணிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. மே 29 வரை இணையவழி ஊடாக மேன்முறையீடுக ளைச் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கல்வி அமைச்சின் உத்தி யோகபூர்வ இணையத்த ளமான www.moe.gov.lk என்பதற்குச் சென்று அதிகபட்சம் 3 பாடசாலை களுக்காக மேன்முறை யீடு செய்யமுடியும் என்ப துடன், http://g6application.moe.gov.lk எனும் நேரடி இணைப்பு ஊடாகவும் விண்ணப்பிக்க முடியும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மே 29ஆம் திகதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் அமைச்சு அறி வித்துள்ளது.

## மரண அறிவித்தல்

மலர்வு 19 . 05 . 1934



உதிர்வு 09 . 05 . 2026

(CR/47520) J-1

### Dr.செல்லத்துரை கனகசிங்கம்

கச்சாய் தெற்கு, அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.செல்லத்துரை கனகசிங்கம் அவர்கள் கடந்த (09.05.2026) சனிக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மேரியின் அன்புக் கணவனும், சந்திரகாந்தி, நிர்மலாராணி, நிர்மலன், நிறைஞ்சன், நிறைஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், மோகன், புஸ்பகலா, கலைமகள், ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரகா, கேசவராம், ஹேமசுதன், சந்தனா, சோபிகா, கார்த்திகா, ஆர்த்திகா, லாவின், தனுஶ்ரீ, மோகன்லால், ஆருஷன், ஏஞ்சல் ஆகியோரின் பாசமிகு பேரனும், சரஸ்வதி பொன்னம்பலம், செல்லம்மா பத்மநாதன் (ஓய்வுநிலை அதிபர்), பூபதி வைத்தியநாதர் (ஓய்வுநிலை கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.05.2026) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
N.Sangeethan - 077 473 4699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கல்வியை சிதைப்பதற்கு முயற்சி


## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வடக்கு மாகாணத்தின் கல்வியை முழுமையாக சிதைக்கும் நிகழ்ச்சி நிரலை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிலையில், அதற்கு வடமாகாண ஆளுநர் உட்பட பதவி ஆசையில் சில அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றார் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபசெயலாளர் தீபன் திலீசன் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றத்தில் பல முறைகேடுகள் இடம்பெற்ற நிலையில், அதுதொடர்பில் நீதிமன்றங்களிலும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சேவையின் தேவை கருதிய இடமாற்றம் முறைகேடாக மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டி, இடைக்காலத் தடையையும் விதித்தது. அதன் பின்னர் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் மேன்முறையீடுகளைப் பரிசீலிப்பதாக ஆணைக்குழுவுக்கு வழங்கிய உறுதிப்பாட்டை அடுத்து இடைக்காலத் தடை நீக்கப்பட்டு, தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறான நிலையில் தற்போது மேன்முறையீட்டைப் பரிசீலிக்கிறோம் என்ற போர்வையில் முறையற்ற இடமாற்றங்களை ஆசிரியர்களுக்கு வழங்குவது ஏற்கமுடியாது. ஆசிரியர் இடமாற்றம் என்பது முறையாக மேற்கொள்ளப்படவேண்டும். அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் மேற்கொள்ளும் எந்த ஒரு இடமாற்றத்தையும் நாம் தட்டிக் கேட்கத் தயங்கப் போவதில்லை. யாழ். மாவட்டத்தின் கல்வியை அழிப்பதற்கு திரைமறைவில் பெரும் சாதியொன்று இடம்பெற்று வருகின்றது. தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை விரும்பாத தரப்பினர்கள் ஆசிரியர் இடமாற்றங்களை முறையற்று வழங்கி, மாணவர்களைக் கல்வியில் பின்னோக்கி நகர்த்துவதே திட்டம். இதற்கு உயர் பதவிகளை வகிக்கவேண்டும் என்பதற்காக சில அதிகாரிகளும் துணைபோவதும், ஆளுநர் ஒத்தாசை வழங்குவதும் எமது இனத்துக்குக் கிடைத்த சாபமாகும். எனவே இதற்கு எதிராக அனைத்து தொழிற்சங்கங்களையும் இணைத்துதொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை விரைவில் மேற்கொள்வோம்– என்றார்.

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 06 . 1937



மறைவு
23 . 04 . 2025

### அமரர் திருநாவுக்கரசு பாலசிங்கம்

திதி: 11.05.2026

(ரஜனி கிறீம் ஹவுஸ் - உரிமையாளர், யாழ்ப்பாணம், வவுனியா)

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
உற்றார் உறவினருடன் அன்பாய் ஆதரவாய்
வாழ்ந்து இறைவனடி சேர்ந்து
ஆண்டொன்று போனாலும்
என்றென்றும் எம் இதயத்தில்
நீங்காத நினைவுகளுடன் வாழும் தங்கள்

குடும்பத்தினர்

(cs. 61385) (N-1)

---

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கதிரைவேலு இரத்தினம்

(மெக்கானிக்)

மலர்வு 07.08.1947 — உதிர்வு 21.04.1998

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இருபத்தெட்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(cs 61399) (N-1)

குடும்பத்தினர்

---

## பொது அறிவித்தல்

### விலைமனுக்கள் கோரல்

வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் திருப்பணி வேலைகளுக்கு தொழிலாளர் கூலி அடிப்படையில் மூடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அனைத்துப் மூலப்பொருட்களும் (Raw materials) கோவில் நிர்வாகத்தால் வழங்கப்படும்.

**வேலை விபரங்கள்:**

1. தற்போதுள்ள கூரை அமைப்பின் திருத்தம் மற்றும் புனரமைப்பு.
2. தேவையான கொங்கிறீற் தளங்களுக்கு நீர்க்கசிவு தடுப்பு வேலை.
3. கூரை மற்றும் தளங்களின் மழைநீர் வடிந்தோடுவதற்கு, சரியான சாய்வுடன் மீள்படுக்கையிட்டு நீர்க்கசிவு தடுத்தல்.
3. வடிகால் அமைப்பை மீள்நிர்மாணம் செய்தல் & மேம்படுத்தல்.
4. திட்டத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்வதற்குத் தேவையான அனைத்து துணை மற்றும் இறுதிகட்ட வேலைகள்.

- அனைத்தும் வேலைகளும் ஒரே ஒப்பந்தத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- கோவில் / சமய நிறுவன கட்டுமான வேலைகளில் முன் அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அனைத்து வேலைக்கும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

**இடப்பார்வை: 13 & 14.05.2026 9:30am முதல் 11:30am வரை**

**தொடர்பு / WhatsApp: 077 922 1161 / 0777 168 777**

விலைமனுக்கள் "வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் புனரமைப்பு விலைமனு" என குறிப்பிட்டு, 22 மே 2026, பி.ப. 4:00 மணிக்கு முன்னதாக கிடைக்கச் செய்யப்பட வேண்டும்:

அனுப்ப வேண்டிய முகவரி:

**பெறுநர், வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.**

* விண்ணப்பப் படிவத்திற்கு WhatsApp மூலம் தொடர்பு கொள்ளவும்
* பெறுநரின் முடிவு இறுதியானது

பெறுநர், வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்.
11-May-2026.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 12 . 1936



மறைவு
22 . 04 . 2025

### அமரர் அருள்நாயகி சண்முகரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை மகாஜனாக்கல்லூரி)

திதி: அபரபக்கநவமி (11.05.2026)

மண்ணுலகில் பிறந்து இறை நம்பிக்கையில் ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து மண்ணுலகில் மனம் மகிழ வாழ்ந்து இவ்வுலக வாழ்வை துறந்து, கதிரையாண்டவரின் கழல்களில் சாந்தியைப் பெற முதலாம் ஆண்டு நினைவஞ்சலியன்று மெய்யன்போடு பிரார்த்திப்போமாக.....

அருளகம்,
கேணியடி வீதி,
[illegible]டி, தெல்லிப்பழை

(CS/61390) J-1


என்றும் நினைவில்
பெறாமகன்
கா.சசிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

11.05.2026 திங்கட்கிழமை

## உக்ரைனுடன் போர்நிறுத்தம்

# ரஷ்ய அதிபர் புடின் அறிவிப்பு சர்வதேச அரசியலில் திருப்பம்



மொஸ்கோ, மே 11

**உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் மிகவிரைவில் நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்படும் என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.**

இரண்டாம் உலகப்போரில் ரஷ்யப் படையால் நாஜிக்கள் வீழ்த்தப்பட்டதை முன்னிட்டு, ரஷ்யாவில் நேற்று வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இதில் உரையாற்றும்போதே உக்ரைனுடன் நிரந்தரப் போர்நிறுத்தம் செய்வது தொடர்பான அறிவிப்பை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை மிக விரைவில் நிறைவுக்கு வரும். இந்தப் போரை நிறைவுக்குக் கொண்டுவரும் காலம் நெருங்கியுள்ளது. ரஷ்யா தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் அச்சப்படத் தேவையில்லை. அவற்றுக்குப் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன். ஐரோப்பாவுடனான பேச்சுவார்த்தையின் பிரதான பங்காளியாக ஜேர்மனியின் முன்னாள் அதிபர் கெர்ஹார்ட் ஷ்ரோடர் செயற்படுவார். உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் எமது இலக்கை நாங்கள் அடைந்துள்ளோம் - என்றார். முன்னதாக, இரண்டாம் உலகப்போரில் ரஷ்யப் படையால் நாஜிக்கள் வீழ்த்தப்பட்டதை முன்னிட்டு, ரஷ்யாவில் இம்முறை வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் ஒரு பகுதியாக, உக்ரைனுடன் இரண்டு நாள்கள் போர்நிறுத்தம் செய்வதாக ரஷ்ய அதிபர் புடின் ஏற்கனவே அறிவித்திருந்தார். இதன் தொடர்ச்சியாகவே தற்போது நிரந்தரப் போர் நிறுத்தம் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் ஈரான் அழிக்கப்படுவது நிச்சயம்!

### ட்ரம்ப் மிரட்டல்



வொஷிங்டன், மே 11

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், ஈரான் அழிக்கப்படுவது உறுதி என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் தற்போது இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் இதுவரை பொதுவான இணக்கப்பாடுகள் எவையும் எட்டப்படவில்லை. குறிப்பாக, அணுவாயுத விடயத்தில் ஈரான் எவ்வித விட்டுக்கொடுப்பையும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறான நிலையிலேயே, ஈரானுக்கு அதிபர் ட்ரம்ப் பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார். அமெரிக்காவின் ஆறுவாரகால இராணுவ நடவடிக்கையில் ஈரான் அனைத்தையும் இழந்துள்ளது. அவர்களின் இராணுவம், பொருளாதாரம் என அனைத்தையும் நாங்கள் கைப்பற்றியுள்ளோம். ஈரானிடம் தற்போது எதுவுமில்லை. எனினும், அந்த நாடு எம்முடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அணுவாயுதங்களைக் கைவிட வேண்டும். இல்லையேல் இதுவரை முன்னெடுக்கப்பட்ட தாக்குதலை விடவும் கோரமான தாக்குதல்களை நாங்கள் நடத்துவோம் என்றார். (ம)



## காங்கிரஸ் கட்சி ஒட்டுண்ணி முதுகில் குத்தும் அரசியல்!

### மோடி சாட்டை

சென்னை, மே 11

துரோகம் இழைக்க மட்டுமே காங்கிரஸ் கட்சிக்குத் தெரியும். தனது நீண்டகால கூட்டணி கட்சியான தி.மு.க.வுக்கே அந்தக்கட்சி துரோமிழைத்துள்ளது. ஒட்டுண்ணி போன்ற காங்கிரஸ் கட்சிக்கு இப்போது தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள, தான் சவாரி செய்ய மற்றொரு கட்சியின் துணை தேவைப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் நடைபெற்ற 'வாழும் கலை' அமைப்பின் 45ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 25 - 30 ஆண்டுகளாக காங்கிரஸை மீண்டும் மீண்டும் மீட்டெடுத்தது தி.மு.க.தான். ஆனால், அதிகாரம் என்று வரும்போது கிடைத்த முதல் வாய்ப்பிலேயே தி.மு.க.வின் முதுகில் காங்கிரஸ் குத்திவிட்டது. 2014க்கு முன் 10 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி செய்வதற்கு தி.மு.க.வே தூணாக இருந்தது. அத்தகைய நெருக்கமான கூட்டணிக் கட்சிக்கே காங்கிரஸ் துரோகம் இழைத்துள்ளது. காங்கிரஸ் கட்சி இப்போது தனித்து இயங்கும் திறனை இழந்துவிட்டது. மற்ற பிராந்தியக் கட்சிகளின் துணையோடு பிழைப்பு நடத்தும் ஒரு "ஒட்டுண்ணி" போல மாறிவிட்டது. காங்கிரஸின் அகராதியில் 'நிர்வாகம்' என்ற சொல்லே இல்லை. அவர்கள் போலி வாக்குறுதிகளை அளிப்பதில் மட்டுமே வல்லவர்கள் - என்றார். (ச-இ)

## மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. ஆட்சி


சென்னை, மே 11

இந்தியாவின் மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியின் நீண்டகால ஆட்சியை முறியடித்து, பா.ஜ.க.வின் சுவேந்து அதிகாரி அந்த மாநிலத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுக்கொண்டுள்ளார். இந்தப் பதவியேற்பு நிகழ்வு பிரதமர் மோடி தலைமையில் கொல்கத்தாவின் பிரிகேட் பரேடு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

293 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. பா.ஜ.க. கட்சி 207 இடங்களையும் திரிணமூல் காங்கிரஸ் 80 இடங்களையும், காங்கிரஸ் 2 இடங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு இடத்தையும் கைப்பற்றியுள்ளது. ஆளுநர் ஆர்.என். ரவி, சுவேந்து அதிகாரிக்கு முதல்வராகப் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். திலீப் கோஷ், அக்னிமித்ரா பால், அசோக் கீர்தானியா, குதிராம் துடு மற்றும் நிஷித் பிரமானிக் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். (ச-இ)

## இஸ்ரேல் – ஹிஸ்புல்லா மீண்டும் முற்றியது போர்

டெல்அவிவ், மே 11




இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இடையில் மீண்டும் போர் உச்சம் பெற்றுள்ளது என்று லெபனான் அரசாங்கம் தகவல் வெளியிட்டுள்ளது. லெபனானில் செயற்பட்டுவரும் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக மோதல்கள் நிலவி வந்தன. இதையடுத்து, அமெரிக்காவின் தலையீட்டில் அங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இவ்வாறான நிலையிலேயே, போர் நிறுத்த ஒப்பந்ததையும் மீறி இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையில் தற்போது மோதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று லெபனான் அரசாங்கம் கூறியுள்ளது. (ம)

## வௌவால்களிடமிருந்து புதிய வைரஸ்!

தாய்லாந்தில் கண்டுபிடிப்பு

ஹொங்கொங், மே 11

வௌவால்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் புதிய வகை கொரோனா வைரஸை தாய்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த வைரஸ் மனித உயிரணுக்களில் உள்ள ACE2 (Angiotensin Converting Enzyme 2) என்ற புரதத்துடன் இணையக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது. தற்போது வரை இந்த வைரஸ் மக்களிடையே பரவி வருவதற்கான எந்த ஆதாரமும் இல்லை. விலங்குகளிடம் காணப்படும் வைரஸ்களை முன்கூட்டியே கண்காணிப்பதன் மூலம், எதிர்காலப் பெருந்தொற்றுகளைத் தடுக்க அல்லது தயார் நிலையில் இருக்கமுடியும் என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வேலும்மயிலும் பவுண்டேசனில் மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே 11


வேலும்மயிலும் பவுண்டேசனில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து சித்திபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு, ஓடக்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள வேலும்மயிலும் பவுண்டேசன் தலைமை அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பவுண்டேசனின் தலைமை நிர்வாக அதிகாரி ரி.சிவகுமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆங்கிலம், கணினி, சிங்களம் ஆகிய கற்கைநெறிகள் மற்றும் தையல் பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்த 74 மாணவர்களுக்கு 108 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து நடனம், குழு நடனம், குழுப் பாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-100)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலத்தில் 2026/2027ஆம் ஆண்டுக்கான மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ச-9)



மட்டுவில்மகாவித்தியாலயத்தில் தரம் 11இல் கற்கும் மாணவர்கள், மற்றும் அவர்களின் பெற்றோருக்கு தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலகினரால் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. (ச-9)



# வற்றாப்பளை கண்ணகி அம்மன்
## பொங்கல் உற்சவக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு,மே 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் 2026ஆம் ஆண்டுக்கான வைகாசிப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, ஆரம்பகட்டத் திட்டமிடல் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது. மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பக்தர்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி நடத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளைச் சீராக முன்னெடுத்தல் மற்றும் வாகனத் தரிப்பிடங்களை மேலாண்மை செய்தல், குடிநீர் விநியோகம், மலசலகூட வசதிகள் மற்றும் தற்காலிகக் கடைகளுக்கான இட ஒதுக்கீடுகளை முறைப்படுத்துதல், தடையில்லா மின்சாரம் மற்றும் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பக்தர்களின் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)



வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட நெய்தல் முன்பள்ளியின் சிறுவர் சந்தை நிகழ்வு மயிலிட்டி உப அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச)



நயினாதீவு நாக பூசணி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களது பெற்றோர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல் நிகழ்வு பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களால் அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர். (ச)



# சேதன விவசாயம் பற்றிய தெளிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே 11

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில், சேதன விவசாயம் தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கருத்தரங்கில் சேதன விவசாயத்தின் முக்கியத்துவம், இலங்கை சேதன தரநிலைப்படுத்தல், சேதனப் பொருள்களை டிஜிற்றல் சந்தைப்படுத்தல், சேதனப் பசளை விவசாயச் சான்றிதழ் நடைமுறை, அடுத்த தலைமுறைக்கான சேதன உணவுச் செயலாக்கம் மற்றும் பாதுகாப்பு போக்குகள், சந்தைப்படுத்தல் சாத்தியப்பாடுகள், இலங்கை ஏற்றுமதியில் சேதன விவசாயத்தின் பங்களிப்பு என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

செயலமர்வில் பதனிடுபவர்கள், சேதன மற்றும் விவசாய உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயத்துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே தமிழ் சிவில் சமூக அமையம் இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனித்திருக்கலாம், ஆனால் தமிழர்களின் வீழ்ச்சி என்பது அவர்களது 'தமிழ்த் தேசிய உணர்வை' இழக்கும்போதுதான் நிகழும் என்பதில் சிறீலங்கா அரசு தெளிவாக உள்ளது. தமிழர்களை 'இலங்கையர்கள்' என்ற ஒற்றை அடையாளத்துக்குள் கரைத்து, அவர்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளைச் சிதைப்பதே பேரினவாதத்தின் இறுதி இலக்கு.

1948ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களிடமிருந்து அதிகாரம் கைமாற்றப்பட்டபோது, ஈழத்தமிழர்களின் சம்மதமின்றி அவர்களின் இறைமை சிங்களபௌத்த பெரும்பான்மையிடம் ஒப்படைக்கப்பட்டது. இது ஒரு 'உள்நாட்டு காலனித்துவ' நிலையை உருவாக்கியது. கடந்த 78 ஆண்டுகளாக நில அபகரிப்பு, மொழி மற்றும் பண்பாட்டுச் சிதைப்பு, திட்டமிட்ட படுகொலைகள் மூலம் தமிழின அழிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மட்டும் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் படுகொலை செய்யப்பட்டனர். தற்போதைய அரசாங்கமும் (தேசிய மக்கள் சக்தி) இனப்பிரச்சினைக்குஎந்தமுற்போக்கானதீர்வையோ அல்லது இன அழிப்பிற்கான பரிகார நீதியையோ வழங்க முன்வரவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகள், தமிழ்த் தேசிய உணர்வில் ஏற்பட்ட ஒரு சறுக்கலாகவே பார்க்கப்பட வேண்டும். இது தமிழர்கள் தங்களைச் சரணடைந்துவிட்டார்கள் என்று பேரினவாதம் கணக்கிட வழிவகுத்துள்ளது. இன அழிப்பு வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்துவதும், தேசிய உணர்வைப் புடம் போடுவதும் இக்காலத்தின் கட்டாயமாகும்.

போர்க்காலத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட பசியையும் வலியையும் நினைவு கூரும் வகையில், கிராமங்கள் மற்றும் வீடுகள் தோறும் கஞ்சி காய்ச்சி பகிர்ந்துண்டு அந்த வரலாற்றை இளைய தலைமுறைக்குக் கடத்துதல், வீடுகள் மற்றும் பொது இடங்களில் சுடரேற்றி அஞ்சலி செலுத்துதல் மற்றும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெறும் பிரதான நினைவேந்தலில் பங்கெடுத்தல், மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகள் மற்றும் புகைப்படக் கண்காட்சிகள் மூலம் இன அழிப்பு வரலாற்றைப் பதிவு செய்தல், ஒவ்வொரு கிராமத்திலும் நடந்த படுகொலைகள் மற்றும் இன அழிப்புச் சம்பவங்களை ஆவணப்படுத்தி, நினைவாலயங்கள் அல்லது கல்வெட்டுகளை நிறுவுதல், குருதிக்கொடை மற்றும் சிரமதானங்கள் மூலம் தேசப்பற்றை வெளிப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் இன அழிப்பு வரலாற்றை அடுத்த சந்ததிக்கு கடத்த முடியும்.

தொடரும் இன அழிப்பை அடையாளங் காண்பதும், இன அழிப்பையும் அதை எங்களுக்கு செய்தவர்களையும் சந்ததி தோறும் மறவாதிருப்பதற்கான பணிகளைச் செய்வதும் எம் தேசத்துக்காக நாங்கள் ஆற்ற வேண்டிய பணியென்பதை ஒவ்வொரு தமிழனும் நினைவு கூரும் நாள்களாகவும், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதற்கான நாள்களாகவும் ஆண்டு தோறும் வரும் மே 18ஐயும் அதனோடிணைந்த நாள்களையும் நாங்கள் மாற்றுவோம்-என்றுள்ளது. (அ-எ-26)

## தமிழகத்தின்...

செய்துவைத்தார். சுமார் 6 ஆயிரம் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்துடன் பதவியேற்பு விழா நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 தொகுதிகளில் வெற்றிபெற்றிருந்தது. ஆயினும் ஆட்சியமைக்க 118 ஆசனங்கள் தேவை என்ற நிலையில், தமிழக வெற்றிக்கழகம் ஆட்சியமைப்பது இழுபறியில் இருந்தது.

காங்கிரஸ் கட்சி மற்றும் சில கட்சிகளின் ஆதரவுடன் தமிழக வெற்றிக்கழகம் பெரும்பான்மையை தமிழக ஆளுநருக்கு உறுதிப்படுத்தியதை அடுத்து, தமிழக வெற்றிக்கழகம் ஆட்சியமைக்க நேற்றுமுன்தினம் தமிழக ஆளுநர் அனுமதி வழங்கியிருந்தார். அதையடுத்து நேற்று தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் நேற்று முதலமைச்சராகப் பதவியேற்றார்.

தமிழக சட்டசபை இன்று கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக வெற்றிக்கழகம் எதிர்வரும் 13ஆம் திகதிக்குள் சட்டசபையில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். (அ-எ-இ)

## மே 18...

சி.ஜோசப் விஜய்யிடம் தமிழ்த் தேசியப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜய்க்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் தமிழகத்தின் ஆதரவு மிக முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவது உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களின் இதயங்களில் தமிழக முதலமைச்சருக்கு நீங்காத இடத்தை வழங்கும் என்றும், இனவழிப்புக்கு நீதி கோரும் போராட்டத்துக்குப் பெரும் வலுச் சேர்க்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அரங்கேறியது இனவழிப்பு என்பதை உறுதிப்படுத்தி, அதற்கான சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தும் நிலைப்பாட்டைத் தமிழக அரசு மீண்டும் வலுவாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும், 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக, புதிய அரசின் தலைமையிலும் அதே உறுதியான நிலைப்பாடு இருப்பதை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-எ-26)

## விஜய்க்கு...

முறையாகத் தொடரும் மக்களுக்கிடையிலான ஆழமான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெருக்கமடைந்து வரும் சூழலில், எமது எதிர்காலம் மிகப் பெரிய பொருளாதார வாய்ப்புகளையும் முன்னேற்றத்தையும் கொண்டுள்ளது. இந்திய இலங்கை இடையிலான வலுவான கூட்டாண்மையின் கீழ், தமிழகத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பிராந்திய செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடைய நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

முதலமைச்சர் விஜய் மற்றும் தமிழக மக்கள் அனைவருக்கும் மகத்தான வெற்றிகள் கிடைக்க இலங்கை மக்கள் சார்பாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் தனது வாழ்த்தில் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## ஆக்கிரமித்த...

காணிகளில் அண்மையில் அளவீட்டுப் பணி இடம்பெறவிருந்தது. காணிகளின் உரிமையாளர்கள் அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்காத போதும், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை தவிசாளர் சுகிர்தன் அடையாளம் காட்டியிருந்தார்.

அந்த வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லையை அகற்றுமாறும், இல்லையேல் பிரதேசசபை அந்த எல்லையை அகற்றும் என்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தராம தேரருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

பிரதேசசபையின் இந்த நடவடிக்கைக்கு எதிராக, தையிட்டி விகாராதிபதி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்த நிலையில், அந்த முறைப்பாட்டுக்கு அமைய தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதியை விடுவிப்பதற்கு பிரதேசசபை எடுத்துவரும் நடவடிக்கைக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

ஆயினும் பொலிஸாரின் சமர்ப்பணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கட்டளை வழங்குவதற்கு நீதிமன்றம் மறுத்ததுடன், வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தனையும், வலி.வடக்கு பிரதேசசபை செயலாளரையும் இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாவதற்கு உத்தரவிட்டிருந்தது.

இன்று இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள நிலையில், வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தனின் சார்பில் சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகவுள்ளார் என்று தெரியவருகின்றது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளுக்குக் குறுக்காகவே பவானி வீதி அமைந்துள்ளது. அந்த வீதியை விடுவித்தால் கணிசமான காணிகள் தானாக விடுவிக்கப்படும் நிலைமை தோன்றும், அதைத் தடுப்பதற்காகவே திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி பொலிஸார் உதவியுடன் காய்நகர்த்துகின்றார் என்று பொதுமக்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. (அ-எ-26)

## மின்...

அனுமதி வழங்கியுள்ளது. இந்த புதிய கட்டண உயர்வு இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக மின் உற்பத்திக்கான செலவு உயர்ந்துள்ளதால், இந்த கட்டண அதிகரிப்பு கோரப்பட்டுள்ளது என்றும், மின் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், அரசாங்கம் 15 பில்லியன் ரூபா மானியத்தை வழங்க எழுத்துபூர்வமாகச் சம்மதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மானியம் காரணமாக நாட்டிலுள்ள 95 சதவீதமான மின் பாவனையாளர்களுக்கு இந்த கட்டண உயர்வு பொருந்தாது என்றும், வீட்டுப் பிரிவில் 0 முதல் 180 அலகுகள் வரை பயன்படுத்துவோரின் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 181 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

210 அலகுகள் பயன்படுத்துவோருக்கு, தற்போதுள்ள 9,570 ரூபா கட்டணம், 1,760 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 11,330 ரூபாவாக உயரும்.

240 அலகுகள் பயன்படுத்துவோருக்கு, தற்போதுள்ள 12,120 ரூபா கட்டணம், 2,210 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 14,330 ரூபாவாக உயரும்.

270 அலகுகள் பயன்படுத்துவோருக்கு, கட்டணம் 2,660 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

300 அலகுகள் பயன்படுத்து வோருக்கு கட்டணம் 3,110 ரூபாவால் அதிகரிக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

## கிளிநொச்சி...

கப் ரக வாகனத்தில் பயணித்த குழு ஒன்று, மற்றொரு கப் ரக வாகனத்தை மோதி விபத்துக்குள்ளாகியது என்றும், அதில் பயணித்த குழு மீது தாக்குதல் நடத்தியது என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில், சம்பவ இடத்தில் இருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, வாள்கள், கத்திகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய கப் ரக வாகனம் ஒன்று வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்கும், மற்றொருவர் அநுராதபுரம் மருத்துவமனைக்கும், மற்றொருவர் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-55-113)

## மழை...

வளிமண்டலத் தளம்பல் நிலை, இன்று திங்கட்கிழமை தாழமுக்கமாக மாற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை தொடரும் என்றும், தற்போது நிலவும் வானிலை மாற்றங்கள் தென்மேற்குப் பருவமழைக்கு முந்திய காலப்பகுதியாக அடையாளப்படுத தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதியளவில் நாட்டில் பருவமழை நிலைமை முழுமையாக உருவாக வாய்ப்புள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சென்.பற்றிக்ஸ் கல்லூரி வலய மட்டத்தில் சம்பியன்



யாழ்ப்பாணம்,மே 11
யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில், ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இரு பிரிவுகள் முதலாம் இடத்தைப் பெற்று, வலய மட்டத்தில் சம்பியன் பெற்றுள்ளதுடன், மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் தரம் 3, 4 மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். அத்துடன் தரம் 5 மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (க)

யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுக்குட்பட்டோருக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை 39:34 என்ற புள்ளிகள் விகிதத்தில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (க)



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை திருமஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல்10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 20ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு த் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-66)



## இளைஞன்...

புதிய பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றுக்குள் இருந்த இளம் குடும்பஸ்தர் முச்சக்கரவண்டியில் கடத்தப்பட்டு, புதிய பஸ் நிலையத்துக்கும், சோயா வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வயற்பகுதியில் மூன்று மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு, தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நவர், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரிடம் இருந்து கடிதம் ஒன்றில் கையொப்பம் பெறப்பட்டிருந்ததுடன், அவரது கையடக்கத் தொலைபேசியில் இருந்த ஆவணங்களும் அழிக்கப்பட்டிருந்தன என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் மூவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-110)

## யாழ்தேவி...

திணைக்களம் அறிவித்துள்ளது.
பயணிக்ளின் வசதிக்காக இந்த ரயிலில் நான்கு முதலாம் வகுப்பு பெட்டிகள் குளிரூட்டப்பட்ட வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான ஆசனங்களை பயணிகள் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள முடியும்.
பயணிகள் இலங்கை ரயில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான seatreservation.railway.gov.lk ஊடாக ஆசனங்களை இலகுவாக முன் பதிவு செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## கிளினிக்குகள்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டிருந்த நிலையில், நோயாளர்களுக்கான கிளினிக்தொடர்பில்அவர் விளக்கமளித்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஏற்கனவே மருந்துகள் இருப்பில் உள்ளன. அதேவேளை, மூன்று பாரவூர்திகளில் நேற்றுக் கொழும்பில் இருந்து மருந்துகள் தருவிக்கப்பட்டுள்ளன.
மருத்துமவனையின் அனைத்து நோயாளர் கிளினிக்குகளும் நாளை (இன்று) வழமை போன்று நடைபெறும். இரு மாதங்களுக்கு மருந்துகள் வழங்கப்படும் நோயாளர்களுக்கான கிளினிக்குகளும் வழமைபோன்று நடைபெறும், நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்படும்-என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-26)

## சுகாதாரக்...

சேவையை வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவால் முன்வைக்கப்பட்ட இந்தப் பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படும் சுகாதார நிறுவனங்களுக்கு இடையே நிலவும் ஒருங்கிணைப்பு குறைபாடுகளை நீக்கி, வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளிப்பதே இதன் பிரதான நோக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
மாவட்ட மட்டத்திலான சுகாதாரத் தேவைகளை மக்கள் பங்களிப்புடன் கண்டறிதல், அந்தத் தேவைகளை தேசிய மற்றும் மாகாண சுகாதாரத் திட்டங்களுடன் இணைத்தல், புதிய சுகாதாரத் திட்டங்களை அடையாளம் கண்டு அமைச்சுக்குப் பரிந்துரைத்தல், நடைமுறையிலுள்ள திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, உரிய காலத்திற்குள் நிறைவு செய்ய உதவுதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இந்த புதிய பொறிமுறையூடாக நாட்டின் சுகாதார சேவையின் தரத்தை உயர்த்தி, மக்களுக்கு நம்பிக்கையான சேவையை வழங்க முடியும் என சுகாதார அமைச்சு எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (அ-எ-இ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காக்கதீவு சந்தைக்கு எதிரே, யாழ்ப்பாணம், காரைநகர் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன் 48 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- மூன்று, மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் அனைத்துக் காணிகளும் காபற் வீதி முகப்புடன்.
- பரம்பரை ஆவணங்கள் 1940ம் ஆண்டிலிருந்து உறுதி, தோம்பு சரியான முறையில் உள்ளது.
- யாழ் பஸ் நிலையம் 2Km தூரம்
- வீடு, கடைகள், திருமணமண்டபம், களஞ்சியசாலைகள் அமைபபதற்கும், சகல வியாபார நிலையங்களும் அமைப்பதற்கும் உகந்த இடம்.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
076 977 2341, 077 988 6389, 076 077 2674
CS/31792) J-1


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org